**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏறத்தாழ 1,500-க்கும் அதிகமாக பதிவு ஆகக்கூடிய நிலை இருந்தால்தான் அங்கே ஒரு பதிவு அலுவலகம் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய இடம் பற்றி பரிசிலனை செய்யப்படுகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தகுதி இல்லாதவர்களுக்கு ஏன் பதவி உயர்வு அளிக்கப்பட்டது? பதவி உயர்வு அளித்த பிறகு ஏன் பதவி இறக்கம் செய்யப்பட்டது? திரும்ப அவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பதவி உயர்வு அளிப்பது ஐ.ஜீ. பொறுப்பு—அதில் சில சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டன என்பதனால்தான் அது திரும்ப பரிசீலிக்கப்பட்டது. இப்போது அவர்களுக்கு தகுதி இருப்பதை ஆராய்ந்து பதவி உயர்வு அளிக்கப்படுவதைப்பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

## *East Coast Road.*

* 751 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the Central aid received for the East Coast Road from Madras to Kanyakumari as on this date?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கிழக்கடற்கரை சாலைக்காக மத்திய அரசிடம் பெற்ற உதவியின் விபரம் பின்வருமாறு :—

(1) பொருளாதார அல்லது பல மாநில முக்கியத்துவ திட்டத்தின் கீழ் மானியம் ரூ. 16 லட்சம்.

(2) மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு ரூ. 25 லட்சம்.

(3) பொருளாதார அல்லது பல மாநில முக்கியத்துவ திட்டத்தின் கீழ் கடனுதவி ரூ. 261 லட்சம்.

மொத்தம் ரூ. 302 லட்சம்.

**திரு. என். டென்னிஸ் :** இந்த வேலையின் மொத்த மதிப்பீடு எவ்வளவு? அது எப்போது முடிவடையும் என்று எதிர்பார்க்கலாம்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீடு ரூ. 302 லட்சம். மத்தியில் இருந்து கடனாகவும் மானியமாகவும் கேட்கப்பட்டிருக்கிறது. இதில் 28 வேலைகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன? வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

1974 ஏப்ரல் 4]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பாம்பன் பாலம் மாதிரி இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடு எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிற ஒன்று. இது இரண்டு மூன்று ஆண்டுகளாக நடந்துகொண்டிருக்கிறது. இது எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்த ரோடுக்கான முழுப் பணமும் கிடைக்கவில்லை. இடையில் இருக்கிற பாலங்களைக் கட்டுவதற்கான வேலைகள் தான் இப்போது நடைபெற்று வருகின்றன.

*New bridge across Coleroon.*

* 752 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to construct a new bridge at Coleroon connecting Srirangam and Tiruchirappalli; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலை 45-ல் மைல் 193/2 (கி.மீ. 312/8)ல் கொள்ளிட நதியின் குறுக்கே 64.116 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய பாலம் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மத்திய அரசு எப்போது அனுமதி அளித்தது? வேலை எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தேசிய நெடுஞ்சாலையில் வருவதால் எஸ்டிமேட் தயாரித்து டெல்லி போக வேண்டும். பின்னர் டெண்டர் கால்பார் பண்ணி போக வேண்டும்—இப்படி ஒவ்வொன்றுக்கும் அவர்கள் ஒப்புதல் பெற வேண்டியிருப்பதால் நம் மாநிலத்தில் மட்டுமல்ல—எல்லா இடங்களிலும் தேசிய நெடுஞ்சாலை வேலை தாமதம்தான் ஆகும். அதைத் தவிர்க்க முடியாது.

*New over bridge at Coimbatore.*

* 753 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works with reference to question No. 82 answered on 11th August 1973 be pleased to state the estimated cost of the proposed construction work of the over bridge near the bus stand in Coimbatore town ?